Ireland

An Roinn Dlí agus Cirt,
Gnóthaí Baile agus Imirce
Department of Justice,
Home Affairs and Migration

euaa
EUROPEAN UNION
AGENCY FOR ASYLUM

# EURODAC பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை



TAMIL

## நான் ஏன் இந்தச் சிற்றேட்டைப் பெறுகிறேன்?

அதிகாரிகள் உங்கள் பயோமெட்ரிக் தரவை எடுக்க வேண்டியிருப்பதால், நீங்கள் இந்தச் சிற்றேட்டைப் பெறுகிறீர்கள்.



பயோமெட்ரிக் தரவு என்பது விரல்முத்திரைகளும் உங்கள் புகைப்படமும் ஆகும்.

இந்தத் தரவு, உங்கள் அடையாளம் தொடர்பான தகவல்களும் பிற தொடர்புடைய தகவல்களும் சேர்த்து, யூரோடாக் தரவுத்தளத்திற்கு அனுப்பப்படும்.

இந்தச் செயல்முறையின் போது உங்களுக்குள்ள உரிமைகளும் உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதும் இந்தச் சிற்றேட்டில் விளக்கப்பட்டுள்ளது.

## EURODAC என்றால் என்ன?

Eurodac என்பது, EU+ நாடுகளுக்குள் நுழையும் குறிப்பிட்ட வகை நபர்கள் தொடர்பான தகவல்களைச் சேமித்து ஒப்பிடும் ஒரு ஐரோப்பிய தரவுத்தளமாகும். இந்த வகைகள் இந்தச் சிற்றேட்டில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்தத் தரவுத்தளத்தை 31 EU+ நாடுகள் பயன்படுத்துகின்றன; அவை உங்கள் தரவைச் செயலாக்கி, உங்கள் தகவலை மீட்டெடுக்க முடியும். நீங்கள் அனுமதியின்றி மற்றொரு EU+ நாட்டிற்குப் பயணம் செய்து, உங்கள் தரவு மீண்டும் எடுக்கப்பட்டால், Eurodac-இல் சேமித்து வைக்கப்பட்டுள்ள உங்கள் அனைத்து தரவுகளையும் அந்த நாட்டின் அதிகாரிகள் பார்க்க முடியும். சில சந்தர்ப்பங்களில், உங்கள் தரவு புதிய தகவல்களுடன் புதுப்பிக்கப்படும்.

## EU+ நாடுகள் எவை?

**நீங்கள் இப்போது Ireland எனும் ஒரு EU+ நாட்டில் உள்ளீர்கள்.**
**EU+ நாடுகள்:**

ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) 27 உறுப்புநாடுகள்: ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, குரோஷியா, சைப்ரஸ், செக்கியா, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, இத்தாலி, லாத்வியா, லிதுவேனியா, லக்சம்பர்க், மால்டா, நெதர்லாந்து, போலந்து, போர்த்துகல், அயர்லாந்துக் குடியரசு, ருமேனியா, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, ஸ்பெயின், ஸ்வீடன் மற்றும்

மேலும் 4 நாடுகள்: ஐஸ்லாந்து, லிச்சென்ஸ்டைன், நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து.

## Eurodac-இன் நோக்கம் என்ன?

Eurodac-க்கு ஐந்து முக்கிய நோக்கங்கள் உள்ளன:

- சர்வதேச பாதுகாப்பிற்கான விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு எந்த நாடு பொறுப்பானது என்பதைத் தீர்மானிக்க EU+ நாடுகளுக்கு உதவுதல்
- EU+ நாடுகளுக்கான ஒழுங்கையான மற்றும் ஒழுங்கற்ற இடம்பெயர்வைக் கண்காணிக்க உதவுதல்
- தேசிய அதிகாரிகளுக்கிடையில் தகவல்களைப் பகிர்ந்து, குற்றச்செயல்களையும் பயங்கரவாதத்தையும் தடுப்பது
- ஐரோப்பாவிற்கு வரும் குழந்தைகளைத் தடமறிந்து பாதுகாப்பதை உறுதி செய்தல்
- விசாக்கள் போன்ற விடயங்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட பிற ஐரோப்பிய தரவுத்தளங்கள் சரியாகச் செயல்படுவதை உறுதி செய்தல்



## Eurodac-இல் யாருடைய தரவு சேமித்து வைக்கப்படுகிறது?

Eurodac-இல், EU+ நாட்டின் பிரஜைகள் அல்லாத பின்வரும் நபர்களின் தரவு சேமித்து வைக்கப்படுகிறது:

- சர்வதேச பாதுகாப்பிற்காக விண்ணப்பித்தவர்கள்
- அனுமதியின்றி ஒரு EU+ நாட்டின் எல்லையைக் கடந்தவர்கள்
- கடலில் மீட்கப்பட்ட பின்னர் ஒரு EU+ நாட்டில் கரையிறக்கப்பட்டவர்கள்
- ஒரு EU+ நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள்
- EU மீள்குடியேற்றத் திட்டம், மனிதாபிமான அனுமதி திட்டம் அல்லது தேசிய மீள்குடியேற்றத் திட்டத்தின் மூலம் ஒரு EU+ நாட்டிற்கு வந்தவர்கள்
- தற்காலிக பாதுகாப்பு வழங்கப்பட்டவர்கள்.

## என் தரவை யார் பார்க்க முடியும்?

EU+ நாட்டிலுள்ள தேசிய புகலிட அதிகாரிகள் உங்கள் பயோமெட்ரிக் தரவை எடுத்து, பிற தொடர்புடைய தரவுகளுடன் சேர்த்து, அதை Eurodac-க்கு அனுப்பி, ஒப்பீட்டின் முடிவைப் பெறுவார்கள்.

சட்ட அமலாக்க ஒத்துழைப்பிற்கான EU முகமையும் தேசிய காவல்துறையும், கடுமையான குற்றச்செயல்களையும் பயங்கரவாதத்தையும் தடுப்பதற்கும், கண்டறிவதற்கும், விசாரிப்பதற்கும் Eurodac-ஐ அணுக அனுமதி கோரலாம். அவர்கள் Eurodac-இல் உங்கள் தரவைத் தேடலாம்.

**முக்கியம்!** உங்கள் தாய்நாட்டிலுள்ள அதிகாரிகள் இந்தத் தகவலை அணுக முடியாது.

## நான் எனது விரல்முத்திரைகளைக் கொடுக்க மறுத்தால் என்ன நடைபெறும்?



உங்கள் பயோமெட்ரிக் தரவை வழங்குவது சட்டப்படி கட்டாயமாகும்.

உங்கள் விரல்முத்திரைகள் ஏன் தேவைப்படுகின்றன என்பதற்கு முக்கியமான காரணங்கள் உள்ளன. நீங்கள் புகலிடத்திற்காக விண்ணப்பித்திருந்தால், இது நடைமுறையில் அவசியமான ஒரு படியாகும்.

EU+ நாடுகளில் இருக்கும் குடும்ப உறுப்பினர்களைக் கண்டறியவும் விரல்முத்திரைத் தரவு உதவக்கூடும்.

உங்கள் விரல் நுனிகள் சேதமடைந்திருந்தால், எதிர்காலத்தில் விரல்முத்திரைகள் மீண்டும் எடுக்கப்படும்..

உங்கள் விரல்முத்திரைகளை வேண்டுமென்றே சேதப்படுத்தினால், பாதகமான விளைவுகள் ஏற்படும்.

உதாரணமாக, நீங்கள் புகலிடத்திற்காக விண்ணப்பித்திருந்தால், அந்த நடைமுறை நிறுத்தப்படலாம்.

உங்கள் நிலைமையில் இந்த நடைமுறை நிறுத்தப்பட்டால், நீங்கள் இனி ஒரு விண்ணப்பதாரராக (புகலிடம் கோருபவர்) கருதப்பட மாட்டீர்கள். அந்த நிலைக்கு உட்பட்ட அனைத்து உரிமைகளையும் நீங்கள் தற்போது மற்றும் எதிர்காலத்தில் இழப்பீர்கள்.

EU+ நாடுகளின் அதிகாரிகள், உங்கள் பயோமெட்ரிக் தரவைப் பெறுவதற்காக இறுதி வழிமுறையாக வலுக்கட்டாயத்தைப் பயன்படுத்தலாம். உங்கள் அடையாளத்தை நிர்ணயிக்க அல்லது சரிபார்க்க, இறுதி வழிமுறையாக அவர்கள் உங்களைத் தடுத்து வைக்கவும் முடியும்.

இந்த நாட்டிலுள்ள அதிகாரிகளுக்கு உங்கள் விரல்முத்திரைத் தரவை வழங்க நீங்கள் மறுத்தால், அதனால் குறிப்பிட்ட விளைவுகள் ஏற்படும்.

இந்த நாட்டில் உள்ள அதிகாரிகளுக்கு உங்கள் கைரேகைத் தரவை வழங்க மறுப்பது, சர்வதேசப் பாதுகாப்பு அலுவலகம் உங்கள் சர்வதேசப் பாதுகாப்புக்கான விண்ணப்பத்தை மறைமுகமாகத் திரும்பப் பெறுவதற்கான ஒரு காரணமாகும்.

## எனது Eurodac தரவு தொடர்பான எனது உரிமைகள் என்ன?

ஒவ்வொரு EU+ நாட்டிலும் தரவின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் ஒரு அதிகாரம் உள்ளது. தரவுக் கட்டுப்பாட்டாளரையும் தரவுப் பாதுகாப்பு அதிகாரியையும் தொடர்புகொண்டு, Eurodac-இல் சேமித்து வைக்கப்பட்டுள்ள உங்கள் தரவை அணுகக் கோருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

உங்கள் தகவல் பின்வருமாறு இருப்பதாக நீங்கள் கருதினால், அதைத் திருத்துமாறு கோரலாம்:

- தவறானதாக இருந்து, திருத்தப்பட வேண்டியிருந்தால்
- முழுமையற்றதாக இருந்து, புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தால்

உங்கள் தகவல் பின்வருமாறு இருப்பதாக நீங்கள் கருதினால், அதை அழிக்குமாறு கோரலாம்:

- Eurodac-இல் சட்டவிரோதமாக பதிவுசெய்யப்பட்டிருந்தால்

தரவுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் தரவுப் பாதுகாப்பு அதிகாரியின் தொடர்பு விவரங்களை, '**பிற பயனுள்ள தகவல்கள்**' என்ற தலைப்புடைய இந்தச் சிற்றேட்டின் இறுதிப் பக்கத்தில் காணலாம்.

உங்கள் தரவு கையாளப்பட்ட விதம் குறித்து நீங்கள் ஒரு முறையான புகாரைச் செய்ய விரும்பினால், தேசிய மேற்பார்வை அதிகாரத்தைத் தொடர்புகொள்ளலாம்.

தேசிய மேற்பார்வை அதிகாரத்தின் தொடர்பு விவரங்களை இந்தச் சிற்றேட்டின் இறுதிப் பக்கத்தில் காணலாம்.

# பிற பயனுள்ள தகவல்கள்

## தரவுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தின் தொடர்பு விவரங்கள் பற்றிய தகவல்

இந்த நாட்டிலுள்ள தரவுக் கட்டுப்பாட்டாளரின் அலுவலகத்தையும் தரவுப் பாதுகாப்பு அதிகாரியையும் எவ்வாறு தொடர்புகொள்வது என்பது பற்றிய தகவலை கீழே காணலாம்.

உங்களின் எந்த தனிப்பட்ட தரவு Eurodac-இல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது என்பதை தரவுக் கட்டுப்பாட்டாளர் உங்களுக்குத் தெரிவிக்க முடியும். உங்கள் தனிப்பட்ட தரவு துல்லியமாகச் சேமித்து வைக்கப்படவில்லை என்றால், அந்தத் தரவைத் திருத்துமாறு நீங்கள் கோரலாம்.

உங்கள் தகவல்களில் ஏதேனும் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டதாக நீங்கள் கருதினால், கீழே உள்ள தொடர்புத் தகவலைப் பயன்படுத்தி அந்தத் தகவலை அழிக்குமாறு நீங்கள் கோரலாம்.

தரவுக் கட்டுப்பாட்டாளரின் தொடர்பு விவரங்கள்: International Protection Office, Immigration Service Delivery, 79-83 Lower Mount Street, Dublin 2, D02 ND99அல்லது contact@ipo.gov.ie

### தரவு சார்ந்த நபரின் உரிமைகள் பற்றிய தகவல்

இந்த நாட்டில், உங்கள் தனிப்பட்ட தரவு பயன்படுத்தப்படுவது தொடர்பாக உங்களுக்கு பின்வரும் குறிப்பிட்ட உரிமைகள் உள்ளன.

உங்கள் தரவுப் பாதுகாப்பு உரிமைகள் தொடர்பான விவரங்களை, https://assets.gov.ie/static/documents/department-of-justice-data-protection-policy.pdf என்ற முகவரியில் கிடைக்கும் நீதி, உள் விவகாரங்கள் மற்றும் குடிவரவுத் துறையின் தரவுப் பாதுகாப்புக் கொள்கையில் காணலாம். நீங்கள் நீதி, உள் விவகாரங்கள் மற்றும் குடிவரவுத் துறையின் தரவுப் பாதுகாப்பு அதிகாரியை dataprotectioncompliance@justice.ie என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

## தேசிய மேற்பார்வை அதிகாரத்தின் தொடர்பு விவரங்கள் பற்றிய தகவல்

இந்த நாட்டிலுள்ள தேசிய மேற்பார்வை அதிகாரத்தைத் தொடர்புகொள்ள, கீழே உள்ள தகவலைப் பயன்படுத்தலாம்.

உங்கள் தனிப்பட்ட தரவு ஏதேனும் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டதாக நீங்கள் கருதினால், தேசிய மேற்பார்வை அதிகாரத்திடம் ஒரு முறையான புகாரைச் செய்யலாம்.

தரவுப் பாதுகாப்பு ஆணையத்தின் தொடர்பு விவரங்கள்: 6 பெம்ப்ரோக் ரோ, டப்ளின் 2, D02 X963 அல்லது https://forms.dataprotection.ie/contact என்ற இணையதளத்தில் அவர்களைத் தொடர்புகொள்ளலாம்.

euaa
EUROPEAN UNION
AGENCY FOR ASYLUM

An Roinn Dlí agus Cirt,
Gnóthaí Baile agus Imirce
Department of Justice,
Home Affairs and Migration

இந்த விளக்கப் பிரசுரம் தகவல் நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டது. இது தனிப்பட்ட வகையில் எந்த உரிமைகளையோ கடமைகளையோ உருவாக்குவதில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் புகலிட முகமை (EUAA) இந்தப் பொருளின் முக்கிய உள்ளடக்கத்தை வழங்கியுள்ளது. இந்த விளக்கப் பிரசுரத்தை நகலெடுப்பதற்கும் மாற்றம் செய்வதற்கும் EU உறுப்புநாடுகளுக்கு மட்டும் EUAA அனுமதி வழங்கியுள்ளது. இந்த விளக்கப் பிரசுரத்தில் EU உறுப்புநாடுகளாலோ பிற பொறுப்புடைய மூன்றாம் தரப்பினராலோ இடம்பெற்றுள்ள தகவல்களின் துல்லியத்திற்கோ உள்ளடக்கத்திற்கோ முழுமைக்கோ சட்டபூர்வத்திற்கோ நம்பகத்தன்மைக்கோ EUAA எந்தப் பொறுப்பையும் சட்டப் பொறுப்பையும் ஏற்காது. இந்த விளக்கப் பிரசுரத்தில் இடம்பெற்றுள்ள தகவல்கள் பயன்படுத்தப்படும் விதத்திற்காக EUAAவும் அதன் சார்பில் செயல்படும் எவரும் பொறுப்பேற்கமாட்டார்கள்.

© ஐரோப்பிய ஒன்றிய அசைலத்திற்கான முகமை, 2025